2026 மார்ச் மாதம் 23– ஆம் தேதி திங்கட்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 57/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23– ஆம் தேதி திங்கட்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW4 – அய்யம்மாள் ஜோதி |
| தகப்பனார் பெயர்: | கணபதி |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | காவல் ஆய்வாளர், போடிநாயக்கனூர் காவல்நிலையம் |
| வயது : | 49 |

23.03.2026

(2வது எதிரி ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்போது போடிநகர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.02.2025ம் தேதி நான் தேவாரம் காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது தேவாரம் சார்பு ஆய்வாளர் திரு.பாஸ்கரன் என்பவரால் வழக்கு பதிவு வழக்கு பதிவு செய்து மேல்நடவடிக்கைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்ட தேவாரம் காவல் நிலைய குற்ற எண் 27/25 பிரிவு 296(b), 115(2), 351(3), 109 BNS r/w Sec.4 of TNPHW Act எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். வழக்கின்

சாட்சிகளான சிவசந்துரு, சிவசூர்யா, சஞ்சய், சீனு ஆகியோர்களை விசாரணை செய்தேன்.

2. சார்பு ஆய்வாளரிடம் கூறிய வாக்குமூலம்படியே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் எதிரிகளான 1வது எதிரி சசி என்ற ஜெயச்சந்திரன், 2வது எதிரி விக்னேஷ் என்பவர்களை 28.02.2025ம் தேதி 14.00 மணிக்கு கைது செய்தேன். 1வது எதிரியிடமிருந்து குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை கைப்பற்றினேன். எதிரிகளை காவல் அடைப்புக்கு உட்படுத்தினேன். 11.03.2025ம் தேதி சாட்சிகள் கார்த்திகா, சின்னச்சாமி, தங்கபாண்டி, பின்னியப்பன், சார்பு ஆய்வாளர் பாஸ்கரன் ஆகியோர்களை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி செல்வி என்பவரை விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. இவ்வழக்கின் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி RPR.No.39/25 எண் பெற்றேன். இவ்வழக்கின் விசாரணை முடித்து 1வது எதிரி மீது பிரிவு 296(b), 115(2), 351(3), 109 BNS r/w Sec.4 of TNPHW Act ன்படியும், 2வது எதிரி மீது பிரிவு 296(b), 115(2), 351(3) BNS r/w Sec.4 of TNPHW Act ன்படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அத்தாட்சி **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது, படிவம் 91 **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கைப்பற்றப்பட்ட கத்தி **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

4. அத்தாட்சியில் கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றினேன். 161 கு.வி.மு.ச விசாரணை செய்து பதிவு செய்தேனா என்றால் ஆம். சாட்சிகளிடம் மறுவாக்குமூலம் வாங்கினேனா என்றால் சாட்சி செல்வியிடம் மறுவாக்குமூலம் பெற்றேன். வழக்குக் கோப்பை ஒப்படைத்தப்பின் சாட்சிகளை விசாரித்தேனா என்றால் இல்லை. மேல் அதிகாரி கொடுத்த அழுத்தத்தால் இந்த வழக்கை

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. தவறுதலாக எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 23.03.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.23 16:35:16 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
23.03.2026